தமிழ்நாட்டிற்கு வர இருந்த விமானத் தொழிற்சாலை

ரூ.6000 கோடி முதலீட்டில் நாக்பூரில் அமைகிறது!

முதலீட்டை ஈர்ப்பதில் த.வெ.க. அரசு தொடர்ந்து தோல்வி!

சென்னை, அக். 8-

இந்தியாவில் C390 Millennium ராணுவ போக்குவரத்து விமானங்களை தயாரிப்பதற்கான தொழிற்சாலை (எப்.ஏ.எல்.) அமைக்க நாக்பூரை மகிந்திரா குழுமமும், பிரேசிலைச் சேர்ந்த Embraer நிறுவனமும் தேர்வு செய்துள்ளன.

இதையடுத்து, தமிழகத்தில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழக வெற்றிக் கழக (த.வெ.க.) அரசு தோல்வியடைந்து விட்டதாக எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.

இந்திய விமானப்படைக்காக C390 விமானங்களை தயாரிக்கும் திட்டத்துக்கான ஒப்பந்தம் கிடைத்தால், நாக்பூரில் விமானங்களை ஒன்றிணைத்தல், பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்தல், உற்பத்திப் பொறியியல் மற்றும் உள்நாட்டு உதிரிபாக விநியோகச் சங்கிலியை உருவாக்குதல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

C390 விமானத்தை இந்திய விமானப் படை தேர்வு செய்தால், சுமார் 60 விமானங்களை வாங்கும் திட்டம் உள்ளது. பழைய An32 மற்றும் சில Il76 விமானங்களுக்கு மாற்றாக இந்த விமானங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இதனால், இது மிகப்பெரிய ராணுவ விமான ஒப்பந்தங்களில் ஒன்றாக பார்க்கப்படுகிறது.

நாக்பூரைத் தேர்வு செய்ததற்கான காரணங்களை Embraer அல்லது மகிந்திரா நிறுவனம் விரிவாக வெளியிடவில்லை. ஆனால், மகாராஷ்டிர அரசு நிலத்தை விரைவாக ஒதுக்கி, திட்டத்துக்கு தேவையான உதவிகளை செய்ததாக மகிந்திரா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதுதான் தற்போது தமிழகத்தில் அரசியல் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முந்தைய தி.மு.க. ஆட்சியின்போது, தமிழகத்தின் விமானம் மற்றும் பாதுகாப்புத் துறை உற்பத்தி கட்டமைப்பின் முக்கிய பகுதிகளான சூலூர் மற்றும் ஓசூர் ஆகிய இடங்கள் Embraer நிறுவனத்திடம் முன் வைக்கப்பட்ட தாக கூறப்படுகிறது.

சூலூர், ஓசூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏற் கெனவே விமானம் மற்றும் பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களும், திறமையான பொறியாளர்களும், உற்பத்தி நிறுவனங்களும் உள்ளன. எனவே, இத்திட்டத்தை தமிழகத்துக்கு கொண்டுவருவதற்கான வாய்ப்பு இருந்ததாக தி.மு.க. தரப்பு கூறுகிறது.

முன்னாள் தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, த.வெ.க. ஆட்சியில் விமான உற்பத்தி, தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள மிகப்பெரிய உதிரிபாக உற்பத்தி சங்கிலியை உருவாக்கக்கூடிய திட்டம் தமிழகத்தை விட்டு சென்று விட்டதாகக் குற்றம்சாட்டினார்.

'இது சாதாரண தொழிற்சாலை அல்ல. இந்தியாவுக்கு எதிர்காலத்தில் 60 முதல் 80 C390 விமானங்கள் தேவைப்படலாம். மகாராஷ்டிர அரசு நிலத்தை விரைவாக ஒதுக்கியதாக மகிந்திரா நிறுவனம் பாராட்டியுள்ளது. அப்படியிருக்க தமிழகத்தில் என்ன நடந்தது?' என்று அவர் கேள்வி எழுப்பினார்.

தமிழகத்திடம் விமான உற்பத்திக்கான கட்டமைப்பு, பொறியியல் திறமை மற்றும் உற்பத்தித் திறன் இருந்தும், முதலீட்டுத் திட்டங்களை தொடர்ந்து பின்தொடர்ந்து கொண்டு வருவதற்கு தீவிர முயற்சி தேவை என்றும் ராஜா தெரிவித்தார்.

சுமார் ரூ.6,000 கோடி முதலீடும், 1,000 வேலைவாய்ப்புகளும் உருவாகக்கூடிய திட்டம் இது என்றும், ரூ.1 லட்சம் கோடி மதிப்பிலான 60 விமானங்களுக்கான விமானப் படை ஒப்பந்தத்துடன் இந்த திட்டம் தொடர்புடையது என்றும் ,

'சூலூர், ஓசூர் ஆகிய இடங்கள் ஏற்கெனவே முன்வைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் தேவையான விமானத் துறை கட்டமைப்பும் இருந்தது. ஆனால், திட்டத்தை இறுதி முடிவு வரை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் அரசு தமிழ்நாட்டில் இல்லை. மகாராஷ்டிரா நிலத்தை ஒதுக்கி திட்டத்தை தன் பக்கம் கொண்டு சென்றுவிட்டது' என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.

இந்தத் திட்டம் தமிழகத்துக்கு வந்திருந்தால் விமான உற்பத்தியுடன் ஆயிரக்கணக்கான வேலைவாய்ப்புகளும், அதனைச் சார்ந்த பல்வேறு நிறுவனங்களும் தமிழகத்தில் உருவாகியிருக்கும் என்றும் கூறப்பட்டது.

இதற்கிடையே, Embraer நிறுவனம் இந்தியாவில் தனது உற்பத்தி நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தவும், எதிர்காலத்தில் பிராந்திய பயணிகள் விமானங்கள் உள்ளிட்ட திட்டங்களை மேற்கொள்ளவும் தயாராகி வருவதாக கூறப்படுகிறது. இதனால், விமானத் துறை சார்ந்த அடுத்தகட்ட முதலீடுகளை தமிழகம் எவ்வாறு ஈர்க்கப் போகிறது என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

கடந்த தேர்தலைவிட பதிவான வாக்குகள் குறைவு!

மதுராந்தம் - தாராபுரத்தில் பதிவான வாக்குகள்!

நாளை எண்ணப்படுகின்றன!

சென்னை, அக். 8-

தமிழ்நாட்டில் பெரும் அரசியல் எதிர்பார்ப்பை ஏற்படுத்திய மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்ட மன்றத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு அக்டோபர் 6 முழுமையாக நிறைவடைந்தது. காலையில் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6:00 மணி வரை சுமுகமாக நடந்து முடிந்தது. தேர்தல் களம் அமைதியாக முடிந்தாலும், முந்தைய பொதுத் தேர்தலை விட இந்த முறை இரண்டு தொகுதிகளிலுமே வாக்குப்பதிவு சதவீதம் கணிசமாகக் குறைந்துள்ளது. மதுராந்தகம், தாராபுரம் தொகுதிகளில் பதிவான வாக்குகள் நாளை காலை எண்ணப்படுகின்றன.

மதுராந்தகம் தொகுதியில் மொத்தம் 27 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். தி.மு.க. சார்பில் இ.பரந்தாமன், அ.தி.மு.க. சார்பில் கணிதா சம்பத், .வெ.க. சார்பில் மரகதம் குமரவேல், நாம் தமிழர் கட்சி சார்பில் ஜானகிராமன் மற்றும் சி.பி.எம். சார்பில் சுகந்தி ஆகியோர் முக்கிய வேட்பாளர்களாகக் களம் கண்டனர். 2,13,788 வாக்காளர்களைக் கொண்ட இந்தத் தொகுதியில் 285 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

தாராபுரம் தொகுதியில் மொத்தம் 22 வேட்பாளர்கள் களத்தில் நின்றனர். தி.மு.க. சார்பில் சுகன்யா, அ.தி.மு.க. சார்பில் பானுமதி, சி.பி.ஐ. சார்பில் லட்சுமணன் த.வெ.க. சார்பில் சத்யபாமா, நாம் தமிழர் கட்சி சார்பில் கார்த்திகா ஆகியோர் போட்டியிட்டனர். 2,23,306 வாக்காளர்கள் உள்ள இத்தொகுதியில் 320 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

வாக்குப் பதிவில் மதுராந்தகம் தொகுதியில் 86.26% வாக்குகள் பதிவாகின.

தாராபுரம் தொகுதியில் 80.31% வாக்குகள் பதிவாகியுள்ளன.

கடந்த பொதுத்தேர்தலுடன் ஒப்பிடும்போது வாக்குப்பதிவு குறிப்பிடத்தக்க அளவில் சரிந்துள்ளது.

மதுராந்தகம் தொகுதியில் கடந்த பொதுத்தேர்தலில் 93.22% வாக்குகள் பதிவாகியிருந்தன. தற்போது அது 86.26% ஆகக் குறைந்துள்ளது சுமார் 6.96% சரிந்துள்ளன.

தாராபுரம் தொகுதியில் கடந்த முறை 89.92% வாக்குகள் பதிவாகியிருந்தன. இந்த முறை அது 80.31% ஆகக் குறைந்துள்ளது சுமார் 9.61% சரிந்துள்ளன.

பொதுத்தேர்தலில் காட்டிய அளவிலான அதீத ஆர்வத்தை இளம் வாக்காளர்கள் இந்த இடைத்தேர்தலில் வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி முகவர்கள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVM) மற்றும் விவிபேட் (VVPAT) இயந்திரங்கள் முறைப்படி சீல் வைக்கப்பட்டரே பின்னர் மூன்றடுக்கு போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்கு அவை கொண்டு செல்லப்பட்டன: மதுராந்தகம் தொகுதியின் வாக்கு இயந்திரங்கள் ஆத்தூரில் உள்ள ஒருங்கிணைந்த சமுதாய வளர்ச்சி பயிற்சி மையத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளன.

தாராபுரம் தொகுதியின் வாக்கு இயந்திரங்கள் திருப்பூரில் உள்ள எல்.ஆர்.ஜி. அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளன.

அங்கு துப்பாக்கி ஏந்திய போலீசார், சிசிடிவி கேமராக்கள் மூலம் 24 மணி நேரமும் தீவிரக் கண்காணிப்பு போடப்பட்டுள்ளது.

நாளை வாக்கு எண்ணிக்கை

மக்களின் இறுதித் தீர்ப்பு மின்னணு வாக்கு இயந்திரங்களில் பத்திரமாகப் பூட்டப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை நாளை (9.10.2026 - வெள்ளிக் கிழமை) காலை தொடங்கிறது.

இதேபோன்று புதுச்சேரி தட்டாஞ்சாவடியில் பதிவான வாக்குகளும் நாளை காலை எண்ணப்படுகின்றன.

மதுரை காந்தி அருங்காட்சியகம்

பார்வையிட கட்டணம் ரூ.20 நிர்ணயம்! மக்கள் எதிர்ப்பு!

மதுரை, அக். 9-


மதுரையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க காந்தி நினைவு அருங்காட்சியகம், பல ஆண்டுகளாக பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இலவசமாகப் பார்வையிடும் இடமாகவே இருந்து வந்தது. மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறு மற்றும் அவரது நினைவுகளை அனைவரும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கில், இங்கு எப்போதுமே நுழைவுக் கட்டணம் வசூலிக்கப் பட்டதில்லை.

சமீபத்தில் சுமார் ரூ. 10.25 கோடி அரசு நிதியில் புதுப்பிக்கப்பட்ட இந்த அருங்காட்சியகம் பொது மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டது. ஆனால், திறக்கப்பட்ட சில நாட்களிலேயே இங்கு வருபவர்களிடம் நுழைவுக் கட்டணமாக ரூ. 20 வசூலிக்கப்படுவதாகப் புகார்கள் எழுந்துள்ளன. இதற்கு எழுத்தாளர்களும் சமூக ஆர்வலர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

தேசப்பிதா காந்தியடிகளின் வரலாற்றுச் சுவடுகளை உள்ளூர் மக்களும், வெளியூர் மற்றும் வெளி நாட்டுப் பயணிகளும் தடையின்றிப் பார்த்துச் செல்ல வேண்டும் என்பதே இந்த அருங்காட்சியகத்தின் முக்கிய நோக்கம். ஆனால் தற்போது வசூலிக்கப்படும் இந்த 20 ரூபாய் கட்டணம் எளிய மற்றும் ஏழை மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது. குடும்பத்தோடு ஆசையாக அருங்காட்சியகத்தைக் காண வரும் அடித்தட்டு மக்கள், கையில் பணமில்லாமல் வாசலிலேயே நின்று ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து கவிஞர் இரா. இரவி உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள் கூறுகையில், "பல தலைமுறைகளாக இலவசமாக இருந்த ஒரு வரலாற்று நினைவிடத்தில் திடீரெனக் கட்டணம் வசூலிப்பது ஏற்புடையதல்ல. இது ஏழை எளிய மக்களின் வரலாற்று அறிவைப் பறிக்கும் செயல். எனவே அரசு உடனடியாகத் தலையிட்டு, பழையபடி முழுமையான இலவச அனுமதியை வழங்க உத்தரவிட வேண்டும்" என வலியுறுத்தியுள்ளனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; மதுராந்தகம், தாராபுரம் தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு, பர்சன்டேஜ், ஏப்ரலில் நடந்த வாக்குப்பதிவை விட குறைஞ்சிருக்கே கவனிச்சியா?

போண்டி : **ஆமாய்யா; கவனிச்சேன் இளைஞர்களின் ஆர்வம் எதிர்பார்த்த அளவுக்கு இந்த இடைத்தேர்தலில் இல்லேன்னுதான் இதிலிருந்து தெரியுது.**

அடப்பாவமே!



ஒரு
இடைத்தேர்தலுக்காக
முருங்கைக்காய்
புடுங்க வேண்டிய
நிலைக்கு ஆளானதே
நம்ம கேரியர்
உச்சத்துக்கு

தோல்வி தான்...

என்னநாஞ் சொல்றது



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

தெளிவான வழிகாட்டுதல் இல்லாததால்

இலவச மகளிர் பேருந்தில் குளறுபடி!

பெண்கள் வாக்குவாதம்!

சென்னை, அக். 9-

அரசு அண்மையில் கொண்டுவந்த 'வெற்றிப் பயணம்' திட்டத்தின் கீழ், எக்ஸ்பிரஸ், டீலக்ஸ், லிமிடெட் ஸ்டாப் (LSS) மற்றும் புறநகர் பேருந்துகளிலும் பெண்களுக்கு இலவசப் பயணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், போதிய விழிப்புணர்வும் தெளிவான வழிகாட்டுதலும் இல்லாத காரணத்தால், "இலவசப் பேருந்துகள் அனைத்தும் மகளிருக்கான பிரத்யேக ஸ்பெஷல் பஸ்கள்" என்று பல பெண் பயணிகள் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

இதன் விளைவாக, டிக்கெட் எடுத்துப் பயணிக்கும் ஆண் பயணிகளிடம் பெண்கள் வாக்குவாதத்தில் ஈடுபடுவதும், அவர்களை வண்டியை விட்டு இறங்கச் சொல்வதும், இருக்கைகளுக்காகக் கடுமையான சண்டைகள் வெடிப்பதும் எனப் பேருந்துகள் போர்க்களமாக மாறி வருகின்றன.

வழக்கமாக அரசு குறிப்பிட்ட சில நேரங்களில் மகளிர் சிறப்புப் பேருந்து இயக்கும். அதில் ஆண்கள் ஏற அனுமதி கிடையாது.

இது அனைத்துப் பயணிகளுக்குமான பொதுப் பேருந்து, இதில் பயணிக்கும் பெண்களுக்கு மட்டும் கட்டணமில்லை. ஆண்களுக்கு வழக்கம் போல் பயணச்சீட்டு உண்டு. முன்பகுதியில் பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகள் போக, மற்ற இடங்களில் யார் வேண்டுமானாலும் அமரலாம்.

இருப்பினும், திட்டம் தொடங்கப்பட்ட வேகத்தில் பொதுமக்களுக்கு இதுபற்றிய தெளிவான வழிகாட்டுதல்கள் போய்ச் சேரவில்லை. "அரசாங்கம் எங்களுக்குத் தான் இந்த பஸ்ஸை இலவசமாக விட்டிருக்கு.. இதில் ஆண்கள் வந்து பிக் கேட்கும்போது நெரிசலை ஏற்பட நிலைமை கைகலப்பாக மாறுகிறது.

பேருந்து நிலையங்களிலும் சிக்னல்களிலும் வண்டியை நிறுத்திவிட்டு, பயணிகளைச் சமாதானப்படுத்துவதிலேயே ஊழியர்களின் நேரம் வீணாகிறது. ஒரு சில இடங்களில் வாக்குவாதம் முற்றி பயணிகள் ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வெளியாகிப் பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

ஆனால், முறையான விழிப்புணர்வு இல்லாமல் அது சக பயணிகளுக்கு இடையேயான பகையாகவும், பொது அமைதியைச் சீர்குலைக்கும் களமாகவும் மாறுவதைத் தடுக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.